**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE DHARMAPURI**

O.S No. 200 of 2022

Deposition of P.W. 1

Name of the Witness: திருமதி.கௌரம்மாள்

Date : 10.02.2026

**குறுக்கு விசாரணை**

நான் ஏற்கனவே பாகபிரிவினை பாலக்கோடு சார்பு நீதிமன்றத்தில் வழக்கு போட்டிருந்தேன் என்றால் ஆமாம். எனது அண்ணன்கள் முனுசாமி, தேவேந்திரன் மீது அந்த வழக்கை போட்டிருந்தேன். பாகம் வேண்டும் என்று வழக்கு போட்டிருந்தேன். நான் தருமபுரி சார்பு நீதிமன்றத்தில் நானும், என் தங்கை ராதா, காவேரி மற்றும் இந்த வழக்கின் பிரதிவாதிகள் மீது அசல் வழக்கு எண் 36/2015 வழக்கு போட்டோம் என்றால் சரிதான். அந்த வழக்கு பாலக்கோடு சார்பு நீதிமன்றத்திற்கு அசல் வழக்கு எண். 118/2017 என்று மாறுதலாகி விட்டது என்றால் சரிதான். அந்த வழக்கின் பிராதின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.1** ஆக குறியீடு செய்யப்படுகிறது. அந்த வழக்கு நாங்கள் கொடுத்த விவரங்கள் அடிப்படையில் தான் வழக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். அந்த வழக்கு என்னவானது என்று எனக்கு தெரியாது. பாலக்கோடு நீதிமன்றத்தில் கொடுத்த தீர்ப்பை எதிர்த்து நான் மேல் முறையீடு எதுவும் போடவில்லை. அந்த வழக்கில் கொடுக்கப்பட்ட தீர்ப்பை எதிர்த்து இந்த நீதிமன்றத்தில் வழக்கு போடப்பட்டது என்றால் சரியல்ல. வேறு எந்த வழக்கும் போடவில்லை.

2) தற்போது இந்த நீதிமன்றத்தில் தாக்கல் செய்திருக்கும் வழக்கு பாலக்கோடு நீதிமன்றத்தில் கொடுத்த தீர்ப்பிற்கு எதிராக போட்டிருக்கிறேன்.

பாலக்கோடு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 118/2017 தள்ளுபடி செய்யப்பட்ட தீர்ப்புரைக்கு எதிராக இந்நீதிமன்றத்தில் மேல் முறையீட்டு வழக்கு எண் 11/2019 தாக்கல் செய்யப்பட்டு அதுவும் தள்ளுபடி செய்யப்பட்டது என்றால் சரிதான். இந்த வழக்கில் வாதிகளாகிய நாங்கள், 1, 2 பிரதிவாதிகள் சேர்ந்து மேல் முறையீட்டு வழக்கு எண் 11/2019 தாக்கல் செய்த பிறகு சொத்தை விற்றோம் என்றால் சரியல்ல. என்னிடம் காட்டப்படும் 01.07.2020 தேதியிட்ட கிரைய பத்திரத்தில் சார்பதிவாளர் அலுவலகம் சென்று என்னுடைய போட்டோ ஒட்டப்பட்டு அதில் கையெழுத்தும் செய்துள்ளேன் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் படி நாங்களும், என் அப்பா காவேரியும் சேர்ந்து சீனிவாசனுக்கு சொத்தை விற்றோம் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.2** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

3) என்னிடம் காட்டப்படும் 09.03.2020 கிரைய பத்திரத்தில் என் சகோதரர் கோவிந்தசாமியின் புகைப்படம், கையெழுத்து உள்ளது என்றால் சரிதான். என் சகோதரர் கோவிந்தசாமி சீனிவாசனுக்கு சொத்தை விற்றுள்ளார் என்றால் சரிதான். அந்த கிரைய பத்திரத்தின் சான்றிட்ட நகல் **பி.சா.ஆ.3** ஆக குறியீடு செய்யப்படுகிறது.

4) 3ம் பிரதிவாதி தேவேந்திரனுக்கு சொத்தை விற்றது பற்றி வாதிகளுக்கு எப்போது தெரியவந்தது என்று தாவாவில் சொல்லவில்லை என்றால் 2015 தேவேந்திரனுக்கு சொத்தை விற்ற விவரம் தெரிய வந்தது. **(அசல் வழக்கு எண் 118/2017 வழக்கில் பாலக்கோடு சார்பு நீதிமன்றத்தில் 07.12.2017ல் குறுக்கு விசாரணை செய்த போது எனக்கு தெரிந்து 2 ஏக்கர் நிலத்தை எங்களுக்கு**

**தெரிந்து எங்கள் சம்மதத்தின் பேரில் நான் வேறு நபருக்கு 2ம் பிரதிவாதி கிரையம் கொடுத்தார். எங்களுக்கு தெரியாமல் 1 ஏக்கர் 4 பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்ததால் 4ம் பிரதிவாதி வழக்கில் சேர்த்துள்ளோம். 4ம் பிரதிவாதிக்கு கிரையம் கொடுத்தது 6 வருடத்திற்கு முன்பே எனக்கு தெரியும். விவரம் தெரிந்த உடன ் நான ் வழக்கு போடவில்லை என்றால ் சரிதான்)** என்று சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். பாலக்கோடு நீதிமன்றத்தில் என்னுடைய பிரமாணவாக்குமூலம் மற்றும் குறுக்கு விசாரணை சாட்சியம் நகல் **பி.சா.ஆ.4** ஆக குறியீடு செய்யப்படுகிறது. என் அப்பா காவேரிக்கு பாத்தியப்பட்ட சொத்தை என் அப்பா சீனிவாசனுக்கு மட்டும் விற்றார்.

5) 3ம் பிரதிவாதி பேருந்து நிலையத்தில் மூட்டை தூக்கும் தொழில் செய்து வருகிறார். 3ம் பிரதிவாதியும், என் அண்ணன் முனுசாமியும் ஒன்றாக மூட்டை தூக்கும் தொழில் செய்து வருகிறார்கள். 3ம் பிரதிவாதியை ஏமாற்றி சொத்தை வாங்கி விட்டார். நான் எந்த தேதியில் பிரதிவாதிகளிடம் சென்று பாகம் கேட்டேன் என்று நியாபகம் இல்லை. என்னுடைய வழக்கறிஞரிடம் எந்த தேதியில் பாகம் கேட்டேன் என்று சொன்னேன். நான் என்னுடைய வழக்கறிஞரிடம் 13 வருடத்திற்கு முன்பு தேவேந்திரனுக்கு சொத்தை விற்ற விவரத்தை சொன்னேன். அதன் பிறகு அதை பற்றி சொல்லவில்லை. 2013ல் முதல் வழக்கு போடுவதற்கு முன்பாக 3ம் பிரதிவாதியிடம் பேசினேன். அதற்கு பிறகு பேசவில்லை. 3ம் பிரதிவாதி தாக்கல் செய்த பதிலுரையை என் வழக்கறிஞர் என்னிடம் சொல்லவில்லை. தேவேந்திரன் போட்ட பதிலுரையை என ் வழக்கறிஞா ் என்னிடம ் கொடுக்கவும ் இல்லை. படித்து காட்டவும் இல்லை. எனக்கு எழுத படிக்க தெரியாது. சென்னை உயர்

நீதிமன்றத்திலிருந்து எனக்கு சி.ஆர்.பி. 2671/2024 சம்மன் வந்தது. அந்த சம்மனை என் வழக்கறிஞரிடம் கொடுத்து விட்டேன்.

6) ஐ.ஏ.2/2023ல் இந்த வழக்கில் நிராகரிக்கப்பட வேண்டும் என்ற மனுவை எதிர்த்து 3ம் பிரதிவாதி சென்னை உயர் நீதிமன்றத்தில் சி.ஆர்.பி. 2671/2024 தாக்கல் செய்து அந்த சம்மன் தான் எனக்கு வந்தது என்றால் எனக்கு தெரியாது. நான் மேல்முறையீட்டு வழக்கு எண் 11/2019 வழக்கு தள்ளுபடியானதை எதிர்த்து சென்னை உயர்நீதிமன்றத்தில் மேல்முறையீடு எதுவும் செய்யவில்லை என்றால் சரிதான். அசல் வழக்கு எண் 118/2017 வழக்கிலும், மேல்முறையீட்டு வழக்கு எண் 11/2019 வழக்கிலும், மற்றும் இந்த வழக்கிலும் எனக்கு பி.வி.ரவி வழக்கறிஞராக இருந்தார். நான் சென்னை உயர் நீதிமன்றத்தில் தேவேந்திரன் போட்ட சி.ஆர்.பி. 2671/2024 வழக்கிற்கு நான் ஆஜராவேன்.

*(தொடர் குறுக்கு விசாரணைக்காக ஒத்தி வைக்கப்படுகிறது)*

Sd/Tmt.U.Monica, M.L.,
Additional District Judge,
Dharmapuri.